(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 8.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2020 செப்தெம்பர் 11 வெள்ளிக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு

---

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

### பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரங்கள், மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின், 2020 செப்தெம்பர் 22 ஆம் திகதி முதற்கொண்டு செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் சபை அமர்வு நேரங்கள், மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

பாராளுமன்ற சபை முதல்வர்,— உயர் பதவிகள் பற்றிய குழு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 124(1) மற்றும் 127(1) இன் ஏற்பாடுகளினாலும் மற்றும் 2020 செப்தெம்பர் 08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக உயர் பதவிகள் பற்றிய குழுவானது தவிசாளராகச் சபாநாயகரையும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் மேலும் பதினெட்டு (18) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.3),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2020 செப்தெம்பர் 22 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

## அனுதாபப் பிரேரணை

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற கௌரவ ஆறுமுகன் தொண்டமான் .

---